# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*




## "கன்மலை தேன்" வழங்க காத்திருக்கும் ஆண்டவர்!

"தண்ணீர் இல்லை!" என்ற இடத்தை இஸ்ரவேலர்கள் அடைந்தவுடன், அவர்கள் தேவனுக்குச் செய்த, துதி ஸ்தோத்திரங்கள் நின்று போனது.... மோசேக்கு விரோதமாகவும், தேவனுக்கு விரோதமாகவும் ஜனங்கள் முறுமுறுத்தார்கள்! அவர்கள் விரும்பிய 'தண்ணீரை' கன்மலையிலிருந்து கொடுத்துவிட்டார்.... ஆனால், அங்கு அவர்கள் தேவனால் சோதிக்கப்பட்டார்கள் என்பதையோ அவர்கள் அறியவில்லை! "முறுமுறுப்பும் கோபமும்" கொண்டு, தேவனை மனம் வருந்தச்செய்து அவர்கள் பெற்ற தண்ணீருக்கு **"மேரிபாவின் தண்ணீர்!"** என பெயரிட்டு தேவன் அழைத்தார்(சங். 81:1,7).

இந்த இஸ்ரவேலர்கள், தங்கள் தாழ்ச்சியில் "தேவனை தேடியிருக்கவே" அவர் விரும்பினார்! அவர்கள் வாயை "விரிவாய் திறந்து...." ஓ தேவனே! என கூப்பிட்டிருந்தால், தேவனை கண்டடைந்திருப்பார்கள்! (வசனம்.10). மகிழ்ச்சி அடைந்த ஆண்டவர், அவர்களுக்கு வெறும் தண்ணீரை அல்ல, அந்த **கன்மலையிலிருந்து "தேனை" கொடுத்திருப்பேனே** என தேவன் அங்கலாய்த்தார்! இனியும், தேவை நேரத்தில் 'தேவையை அல்ல'.... தேவனையே வாஞ்சித்து தேடக்கடவோம்! அப்போது, மற்ற எல்லாவற்றையும் 'கூடவே' கொடுப்பார்!! (சங். 81:16).

*-tr*

பெட்டகம் 19 செப்டம்பர் 2017 பரல்கள் 9



## பிறருக்கு ஏற்படுத்திய 'களங்கத்தை' திரும்ப செலுத்திய சகேயு!

தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக வந்து நிற்கும் வாழ்க்கை கொண்டவர்களே 'ஒப்புரவாகும்' ஜீவியத்தை பெற்றிருப்பார்கள்! மத்தேயு.5:21-24 வசனங்கள் இந்த அனுதின ஒப்புரவாகும் சுத்திகரிப்பை வலியுறுத்துகிறது! யாரோ ஒருவரிடம் கோபம் கொள்வது! வீணனென்றும், மூடன் என்றும் கூறியது! இன்னும் இதுபோன்ற நமது இருதயத்திலும், நாவிலும் பேசியவைகளைக் குறிப்பிட்டு, அவை 'எரி நரகத்திற்கு ஏதுவாயிருப்பதால்' 23-ம் வசனத்தில் 'ஆகையால்' என எச்சரித்து, அந்த சகோதரர்களிடம் சென்று ஒப்புரவாகும்படி, இயேசு கண்டித்து போதித்தார்! (மத்.21:24).

சகேயு என்ற ஆயக்காரன், **இயேசுவைப் பார்த்தவுடன்** அடைந்த 'ஆச்சரியமான உணர்த்துதலே' அவனது வாழ்வில் மாபெரும் ஒப்புரவாகுதலையும், இயேசு வழங்கிய இரட்சிப்பையும் கொண்டு வந்து தந்தது! (லூக்கா.19:8,9). ஒரு வருமானவரி அதிகாரியாயிருந்த அவன், தவறான வழியில் சேர்த்த தன் **'ஆஸ்தியில் பாதியை'** கொடுத்துவிட தீர்மானித்தான்! அது பொருளைப் பற்றிய விஷயம்! மேலும், **''யாதொருவனிடத்தில், யாதொன்றை'' பொய்யாய் குற்றம் சாட்டியவைகளை நாலத்தனையாய்** திரும்பச் செலுத்தவும் ஆயத்தமானான்! இது பிறரின் கௌரவ அவமதிப்பை குறித்த விஷயம்! ஆங்கில வேதாகமம், அப்படித்தான் தெளிவாக கூறுகிறது: "If I have taken anything from anyone **by false accusation,** I restore fourfold" (NKJV). ஒருவனுக்குத் தெரியாமலோ, தெரிந்தோ அவனது மதிப்பை அல்லது கௌரவத்தை அல்லது நற்பெயரை ஆகிய "ANYTHING" யாதொன்றை களங்கம் செய்திருந்தால், அந்த சகோதரனிடம் 'ஒப்புரவாகுதல்' மாத்திரம் அல்லாமல், யாரிடமெல்லாம் சென்று, அந்த சகோதரனுக்கு அவ்வாறு 'களங்கம்' செய்தோமோ, அவர்களிடமும் சென்று, அந்த 'களங்கத்தைப்' போக்குவதே, "RESTORE" திரும்ப நல்ல நிலைக்கு திரும்புவதாகும்! இந்த இரட்சிப்பே, இயேசு நம்மோடு தங்குவதற்கும், இயேசுவின் வருகையில் அவரோடு செல்வதற்கும் வகை செய்திடும்!

*-Ed*


**பரலோக பொக்கிஷங்கள்**

வருடசந்தா **ரூ.120.00** ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100.00

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**Savings a/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!



கடித தொடர்பு : **பரலோக பொக்கிஷங்கள்**
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell: 98430 49935 Ph: 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## 'தேவனுடைய மகிமையை' தேடும் சபையே, நிலைநிற்கும்!

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை ஆளுகை செய்த அவரது முதல்தரமான ஆசை என்னவென்றால் "பிதா மகிமைப்பட வேண்டும்!" என்பதுதான்.

அவர் செய்த யாவும் பிதாவின் மகிமைக்காகவே இருந்தது. பிதாவின் மகிமையை மாத்திரமே இயேசு தேடி, பிதாவின் அங்கீகாரத்தில் மாத்திரமே அக்கறை கொண்டபடியினால், எல்லா நேரங்களிலும், தன் இருதயத்தில் பூரண இளைப்பாறுதல் கொண்டவராய் இருந்தார்!

**பிதாவின் முகத்திற்கு முன்பாக மாத்திரமே வாழ்ந்திருந்து.... மனுஷருடைய கனத்திற்கோ, புகழ்ச்சிக்கோ இயேசு கவலையற்றிருந்தார்.**

'சுயமாய் பேசுகிறவன், தன் சுய மகிமையைத் தேடுகிறான்' என்றே இயேசு சொன்னார் (யோவான்.7:18). ஆத்தும கிறிஸ்தவன், தான் தேவனுடைய மகிமையைத் தேடுவதாக எவ்வளவுதான் நடித்து வேஷம் போட்டாலும், மெய்யாகவே தன் அடித்தளத்தில் சொந்த மகிமையில் அக்கறை கொண்டவனாகவே இருப்பான். இயேசுவோ, தன் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினபடியால், தனக்கான மகிமையைத் தேடவே இல்லை!

"கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பற்றியும், தேவ காரியங்களைப் பற்றியும்கூட" ஆத்தும சம்பந்தப்பட்ட வைராக்கியங்கள் உண்டு! இந்த வைராக்கியம் மனிதர்களுக்கு முன்பாகவே காணப்படும். மனிதர்களுடைய கனம் கிடைக்காதபோது தளர்ந்து விடும்!

ஆவிக்குரிய வைராக்கியம் மாத்திரமே, வறண்ட நிலத்திலிருந்து முளைக்கக்கூடிய விதையைப்போலிருக்கும். ஆத்துமாவின்படி பிழைக்கிறவன், பெரிய நற்கிரியைகளையும், தன் சரீரத்தையே சுட்டெரிக்கக் கொடுக்கக்கூடிய தியாகமும் செய்கிறவனாய் காணப்பட்டாலும் "தன் சொந்த கிரியைகளை விட்டு ஓயாத வனாகவே இருக்கிறான்" (எபி.4:10). அவன் மனிதர்களுடைய சாட்சியைத் தேடுகிறான்! அவனால் வலதுகை கொடுக்கிறதைத் தன் இடதுகை அறியாதபடிக்கு எதையும் கொடுக்க முடிவதில்லை (மத்.6:3).

மெய்யான தேவபக்தியின் இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கோ, ஒரு மரணம் நிகழ்ந்தாக வேண்டும். **"மனுஷர் கனம் தேடும்" ஆத்மீகம்** கண்டிப்பாய் மரணத்தில் ஊற்றப்பட வேண்டும்!

மனிதனுடைய புத்திசாலித்தனத்தில் ஆரம்பித்து, மனுஷீக சாதுரியத்தினாலும், திறமையினாலும் நடத்தப்படுகிற எதுவும் மனிதனை மகிமைப்படுத்துகிறதாகவே முடியும். ஆம், ஆத்துமாவில் ஆரம்பமாகிற எதுவும் 'சிருஷ்டியைத்தான்' மகிமைப்படுத்தும். எனவேதான், இயேசு தன் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்!

நித்தியத்தில், பரலோகத்தில் இருக்கிற எதுவும்! பூமியில் இருக்கப் போகிற எதுவும்! ஒரு மனிதனுக்கும் கனத்தையோ, மகிமையையோ கொண்டுவராது.

**காலத்தால் நிலைப்பட்டு, நித்தியத்தின் வாசலுக்குள் பிரவேசிக்கப்போகிற ஒவ்வொன்றும் தேவனிடத்திலிருந்து வந்ததும் தேவன் மூலமாய் கிரியை நடப்பித்து தேவனுடைய மகிமைக்காகவே இருப்பதுதான்!!**

தேவனைப் பொறுத்தவரையிலும், ஒரு செயலுக்கு உள்ள மதிப்பும் தகுதியும் அந்த செயலுக்குப் பின்னால் காணும் உள்நோக்கத்தை (Motive) பொறுத்ததாய் இருக்கிறது. நாம் என்ன செய்கிறோம் என்பது முக்கியம்தான். ஆனால் 'ஏன் அதைச் செய்கிறோம்' என்பது அதிக முக்கியமானதாகும்!!

இயேசுகிறிஸ்து, தன் பிதாவின் சமூகத்தில் காத்திருந்து, அவருடைய திட்டத்தை பெற்று, அதைச் செய்வதற்கான பெலனையும் பெற்று, பிதாவின் வல்லமையினால் அவருடைய எல்லா சித்தத்தையும் செய்து முடித்தார்!! அதோடு மட்டுமல்ல, தன் மகத்தான சாதனைகளுக்குப் பிறகு, தன் பிதாவிற்கு மகிமையைச் செலுத்தும்படியே ஜெபிக்கச் சென்றார்!! தன் பிரயாசத்தின் பலனை, தன் பிதாவிற்கே பலியாகச் செலுத்தினார். தானாகவே தனக்கு மகிமையை அவர் தேடவும் இல்லை..... அது, தனக்கு கொடுக்கப்பட்ட போதும் அதை ஏற்றுக்கொள்ளவுமில்லை! (யோவான். 5:41, 8:50). அவருடைய புகழ் பரவலாய் பரவியபோது, மலைக்கு தனித்துச் சென்று பிதாவையே மகிமைப்படுத்தினார் (லூக்.5:15:15,16). தன் பிதாவுக்குரிய மகிமையை 'ஒருபோதும்' தொடக்கூடாது என்றே தீர்மானித்திருந்தார்.

அப்படிப்பட்ட அவருடைய நிலையான மனோபாவத்தின் விளைவு என்னவென்றால், அவருடைய வாழ்க்கையின் இறுதியில் **'பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்'** என்று அவர் நேர்மையாய் சொல்ல முடிந்தது (யோவான்.17:4). ஒரு மனிதன் என்கிற முறையில்

பிதாவை மகிமைப்படுத்தவே அவர் இந்த பூமிக்கு வந்திருந்தார்! தான் என்ன விலைக்கிரயம் செலுத்த வேண்டியதாயிருந்தாலும், பிதாவின் நாமம் மாத்திரமே எப்படியாகிலும் மகிமைப்பட வேண்டும் என்று ஊக்கமாய் ஜெபித்தார். பிதாவின் நாமம் பரலோகத்தில் உயர்த்தப் பட்டு, கனப்படுத்தப்பட்டு, மகிமைப்படுகிறது போலவே, பூமியிலும் மகிமைப்படும்படியாக இயேசு வாழ்ந்து, இறுதியாக மரித்தார்!!

அக்கினி பரிசோதிக்கும் நாளிலே, அவனவனுடைய வேலைப் பாட்டின் நோக்கத்தை, ஒவ்வொருவரும் அறிந்து கொள்வார்கள் என்றே பவுல் கூறினார் (1கொரி.3:13). அந்நாளிலே அவரவருடைய நோக்கங்கள் (Motives) வெளிப்படுத்தப்பட்டு, அது கர்த்தரால் பரிசோதிக்கப்படும் என்பது உறுதி! (1கொரி.4:5). ஆ அந்த நாள், கிறிஸ்துவின் மகிமைக்கு பாத்திரமான நாளாய் இருக்கக்கடவது!

ஆத்துமத்தனமான மனுஷீக ஊழியமோ, ஜனங்களை தேவனிடத்தில் ஈர்த்துக் கொள்வதற்குப் பதிலாக, தன் சுயத்தை உயர்த்தி தன் வசமாய் ஈர்த்துக்கொள்ளும். அந்த ஜனக்கூட்டம், நம்மை வந்து கேட்டு கவர்ச்சிக்கப்பட்டு.... மீண்டும் வந்து நம்மை கேட்டு, நம்மைப்பற்றி புகழ்ந்து கனப்படுத்தும்!! நாம் அந்த ஊழிய இடத்தை விட்டுப் போனபிறகு, அவர்கள் தாங்கள் இருந்த பழைய ஆவிக்குரிய நிலைக்கே வீழ்ந்து, தாங்கள் கேட்ட பிரசங்கம் முழுதும் 'விருதா' என்றிருப்பார்கள்!

**ஒரு ஊழிய பிரயாசத்தின் மெய்யான பரிசோதனை, அந்த ஊழியன் மரித்து மறைந்து விட்டபிறகு.... அவன் ஊழியம் செய்த ஜனங்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை வைத்துதான் இருக்கிறது! அப்பொழுது அவனுடைய பிரயாசம் ஆத்துமத்திற்குரியதா? ஆவிக்குரியதா? என்பது வெளியரங்கமாகும்.**

ஜனங்களை நம்மிடம் ஈர்த்த எல்லா பிரயாசமும், மனிதனையே மகிமைப்படுத்தினபடியால், அவை மரம், புல், வைக்கோல்தான் என்று கடைசிநாளிலே நிரூபிக்கப்படும்!

இயேசுகிறிஸ்துவின் ஊழியம் ஆவிக்குரியதாயிருந்தது! அவர் விட்டுச்சென்ற சீஷர்கள் குறைந்த எண்ணிக்கை உடையவராயிருந் தாலும், அவர்களோ ஆத்துமாவின்படி பிழைக்காமல் ஆவிக்குரியவர் களாய் மாறினபடியால்.... அவர்கள் "இயேசுகிறிஸ்துவின் ஆவிக்குரிய ஊழியத்தை" நிரூபிக்கிறவர்களாய் இருந்தனர்! அவருடைய இந்த மகிமையைப் பிரகாசிக்க, நாமும் அவருடைய அடிச்சுவட்டில் பின் செல்லக்கடவோமாக!!

– சகரியா பூணன்

## சொந்த வீட்டிற்கே தீமையா? … ஆகிலும் சமாதானம் பெற்றேன்!

எங்கள் மாளிகையின் ஒரு கட்டிட வேலைக்காக, எங்கள் நகரத்திற்கு திரும்பி வந்தோம். அங்கு, ஆலயத்திற்கு சென்று ஜெபிக்கும் வாய்ப்பை என் கணவர் மறுத்து விட்டார். ஆகவே, காலை 7 - மணிக்கு எழுந்திருக்க வேண்டிய நான் 4 - மணிக்கே எழுந்து என் கட்டிலில் முழங்கால்படியிட்டு தேவனிடம் ஜெபிக்கத் தொடங்கினேன். என்னுடைய ஆவிக்குரிய மகிழ்ச்சிக்காக, என் கணவரை உதாசினம் செய்யாமல், அவருக்கு செய்ய வேண்டிய பணி ஒவ்வொன்றையும் சரியான நேரத்தில் பூரணமாய் அன்புடன் செய்து முடித்தேன். இவ்வாறு நான் கடினமான பிரயாசம் எடுத்துக் கொண்டதால் என் உடல் நலம் பாதித்து, என் கண்கள் வீக்கம் கொண்டது. இந்த பெலஹீனமான நேரத்தில் எனக்கு அம்மை நோயும் வந்தது. படுக்கையில் தேவனோடு அதிக நேரம் தங்கி இருக்கலாம் என எண்ணிய எனக்கு, சரீர பெலவீனத்தால் சோர்வடைந்து போனேன்.

குறிப்பிட்ட நாளில் சுகமடைந்து, ஆசையுடன் ஆலயத்திற்கு செல்ல என் கணவரிடம் மீண்டும் தயவாய் அனுமதி கேட்டேன். அவரோ ஞாயிற்றுக் கிழமைகளில் தவிர ஆலயம் செல்ல அனுமதி மறுத்துவிட்டார். காலை 5 மணி முதல் 7 - மணி வரை ஆலய வளாகம் தினசரி திறக்கப்படுவது வழக்கம். ஆனால், சுமார் 3 - மைல் அதிகாலை இருட்டில் நடப்பது வெகு கஷ்டம். அந்த நேரத்தில் என் சாரட் குதிரை வண்டி எடுத்துச் செல்லவும் முடியாது. என்னோடு வர உதவிக்காக அழைத்த பணிப்பெண்கள் 'நீங்கள் நடந்து செல்வது கடினம்' என மறுத்தார்கள்.

அதற்கு நான் "தேவனை தேட, தேவன் உதவி செய்வார்" எனக் கூறி, இருட்டோடு எழுந்து பணிப்பெண்களுடன் ஆலயத்திற்கு நடந்து சென்றேன்.

தேவனுடைய சமூகத்தில் என்னை முழுவதுமாய் ஊற்றிவிட்டு, அவரது ஐக்கியத்தின் பரவசத்தில் நிறைந்தவளாய், ஓட்டமும் நடையுமாய் வீடு திரும்பினேன். என் கணவரோ காலை 7 - மணிக்குதான் எழுந்திருப்பார். என் கணவருக்கு இடையூறு இல்லாமல் அதிகாலமே தேவனை தேடி, ஒரு சில மணி நேரங்கள் அவருடைய பாதத்தில் பெற்ற ஆறுதல் என்னை அதிகமாய் பலப்படுத்தியது.

அன்று, வழக்கம்போல் நான் அதிகாலையில் கிளம்பும் போது கார் மேகம் மூண்டது. என் பணிப்பெண்கள் "இன்று போக வேண்டாம்" என தடுத்தனர். நானோ, என் வழக்கமான விசுவாச தைரியத்தில் "தேவன்

எனக்கு உதவி செய்வார்" எனக்கூறி, நடந்துச் சென்றேன். நான் ஆலய வளாகத்திற்கு உள்ளே சென்ற உடன், மழை ஆரம்பித்தது! சில மணி நேரங்கள் தேவனோடு தங்கி இருந்து, தேவனுடைய அன்பினால் ஆட்கொள்ளப்பட்டவளாய் திரும்பி வந்தபோது மழை நின்றது! வீடு வந்து சேர்ந்ததும் மீண்டும் மழை பெய்தது! நனையாமல் ஆலயம் வரவும் மீண்டும் நனையாமல் வீடு சேரவும் **தேவன் மழையின் கால அளவை மாற்றிக் கொடுத்த அற்புதம்** என் உள்ளத்தை நன்றியால் நிரப்பியது! இவ்வாறெல்லாம், தேவனோடு நான் கொண்ட ஐக்கியத்தில் பெற்ற அவரது 'மென்மையான மனதுருக்கத்தையும்' அன்பின் செயல்களையும் விவரிக்க எனக்கு புத்தகங்கள் போதாது!

என் ஆவிக்குரிய தாயாக இருந்த 'கிரங்கர்' அம்மையாரை சந்திக்க, என் கணவரும் என் மாமியாரும் அனுமதி தர மறுத்து விட்டனர். என் மனப்பாரத்தை பகிர்ந்து, ஐக்கியம் கொள்ள அவர்களையே நான் எப்போதும் நாடினேன். இந்நிலையில், என் தகப்பனார் வீட்டுக்குச் சென்று வருவதாக அனுமதி பெற்று, செல்லும் வழியில், நான் 'கிரங்கர்' அம்மையாரை சந்தித்த சம்பவம் என் கணவர் வீட்டாருக்கு தெரிந்துவிட்டது! என் மாமியார், அதிக கோபமடைந்து, இனிமுதல் நான் செல்லும் ஒவ்வொரு அடிகளையும், என் மாமியாரிடம் ஒப்பிக்க வேண்டுமென என் பணிப்பெண்களுக்கு கட்டளையிட்டு, என்னைச் சுற்றி கடுமையான தடை விதித்தார்கள்!

இச்சமயத்தில், என் மனதை அதிக வேதனைப்படுத்திய செயல் "என் சொந்த மகனையே, எனக்கு விரோதமாய்" என் மாமியார் திருப்பிவிட்ட செயல்! என்னைக் காணவந்த நண்பர்களிடம், என் அறையில் வைத்து பேசிக்கொண்டிருந்தேன்!

அச்சமயம், என் மகனை என் அறைக்கு அனுப்பி 'நாங்கள் என்ன பேசுகிறோம்?' என்பதை ஒட்டுக்கேட்க அனுப்பி வைத்தார்கள். பேதையான அவன், ஒட்டுக்கேட்டு, என் மாமியாரிடம் கூறியது, அவர்களுக்கு அத்தனை மகிழ்ச்சியை ஏற்படுத்தி விட்டது!

அவனது நடவடிக்கையில் வித்தியாசம் இருந்ததைக் கண்ட நான், "அன்று, நீ இப்படி பகிரங்கமாய் பொய் சொல்வதைக் கண்டு வேதனை அடைகிறேன்!" எனக் கூறி வேத வசனத்தைக் காட்டி அவனைத் திருத்த மேற்கொண்டேன். கீழ்படியாமல் என்னை எதிர்த்து நின்ற அவன் "அம்மா, நீங்கள் தான் என்னைவிட மோசமான பொய் காரி! என்று பாட்டி சொல்கிறார்கள்" என ஆத்திரமாய் பேசி விட்டான்! அவன் அப்பாவும், பாட்டியும் 'என்னை வெறுக்கிறார்கள்' என்பதை சாதகமாய் எடுத்த பேதமை உள்ளம் கொண்ட அவனுக்காய் உள்ளம் பரிதபித்தேன்.

*என் மகன், தாயாகிய எனக்கே விரோதம் கொண்டு பேசியதை, என் மாமியாரும் என் கணவரும்கூட, மகனின் தீய செயலால் "**எனக்கு விரோதம் ஏற்பட்டது!**" என்ற ஒரே காரணத்திற்காக, அவனை அங்கீகரித்து, அவன் தீமைக்கு தண்ணீர் வார்த்தார்கள்! "ஓ, தேவனே, சொந்த குடும்பத்திற்கே இப்படியும் ஒரு தீமையா?" என உள்ளம் பதைத்துப் போனேன்! ஜெபித்து மன்றாடி, பின்பு 'கிரங்கர் அம்மையாரிடம்' அனைத்தையும் கூறி, அவர்களின் ஆலோசனை களையும் வேண்டினேன்! அதற்கு அவர்கள் "மகளே, நீ தேவனுக்கு இவைகளை தெரியப்படுத்திய பிறகும் உடனே விடை வரவில்லை என்பதைக் குறித்து கலங்காதே! இந்த பாடுகளையும் சிலுவையின் வழியில் ஏற்று, உன் மகனையும் தீமைக்கு துணைநிற்கும் உன் சொந்த கணவரையும், மாமியாரையும் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்து விடு!!" என கூறியதும், அதை அப்படியே ஏற்றுக்கொண்ட என் மனதில் 'புத்திக்கெட்டாத தேவ சமாதானம்' நிறைவாய் என்னை ஆட் கொண்டது!!*

*– மேடம் குயான்*

---

## உண்மை கிறிஸ்தவன், வினோதமானவன்!

*சூழ்நிலையின் கொடுமை எதுவாயிருந்தாலும், உண்மை கிறிஸ்தவன் யாதொரு காயமுமில்லாமல் தப்பித்து விடுவான். ஏனெனில் சூழ்நிலையில் அவன் மோதி மாய்பவன் அல்ல.... மாறாக தேவனிடத்தில் சரணடைந்து விட்டான்! இவ்வழி சென்று ஜெயித்த அவன் 'வினோதன்' அல்லவா!*

*இவன் பெலவீனமாய் இருக்கும்போது பெலவான்! பெலவானாய் இருக்கும்போது அவன் ஒரு பெலவீனன்! அவனுடைய ஜீவியத்தை பொறுத்தவரையில், அவனது பெலன் பெலவீனத்திற்குள் இருக்கிறது ..... ஆனால், தன்னை ஒரு பெலவான் என்று எண்ணும்போது, அவன் பெலவீனம் அடைகிறான். ஆகவே, தன் பெலவீனத்தில் மாத்திரமே தன் முழங்கால் தேவனுக்கு முன்பாக முடங்குவதைக் கண்டு, எப்போதும் பெலவானாய் இருக்கிறான்! ஆ அவன் வினோதன் அல்லவா!*

*உண்மை கிறிஸ்தவன் ஏழையாய் இருந்தாலும், பிறரை ஐசுவரியவானாக்குவான். சிறைச்சாலையிலிருந்த பவுல் ஒரு ஏழை மனுஷன்! ஆனால், அந்த ஏழை தன்மையிலிருந்தே முழு கிறிஸ்தவ உலகத்திற்கும் அளக்க முடியாத ஐசுவரியத்தை கொடுத்துவிட்டார். ஜான் பனியன், பெட்போர்டு சிறைச்சாலையில் ஒரு ஏழை! அவரோ 'மோட்ச பயணம்' புத்தகம் எழுதி, வேதத்தை ஒரு கீதமாய் மாற்றினார்.*

இதே அளவுகோலைக் கொண்டு நீங்கள் கிறிஸ்தவ சரித்திரத்திற்குள் நுழைந்தால் ஒரு ஏழை கிறிஸ்தவனே, எண்ணற்ற பலரை ஐசுவரிய வான்களாய் மாற்றி இருக்கிறார்கள்..... அவன் ஒரு வினோதன் அல்லவா!

ஒரு உத்தம கிறிஸ்தவன், தாழ்வில் உணர்வோடு இருக்கும்போது உயர்ந்திருக்கிறான்! ஆனால், என்று அவனுக்கு உயர்ந்த நிலையின் எண்ணம் வருகிறதோ அன்றே அவன் தாழ்ந்த நிலைக்கு வரும் அபாயத்தை அறிந்திருக்கிறான். ஆகவே, அவன் தேவனுக்கு பயந்து அவரையே சார்ந்து வாழ்வது அபாயமற்ற எல்லை என்பதையும், தன் சுய நம்பிக்கையில் தன்னை வல்லவன் என எண்ணும் எண்ணம், தன்னை அபாய எல்லைக்குள் கொண்டு வருவதையும் அறிந்திருக் கிறான்.... அவன் ஒரு வினோதன் அல்லவா!

தன்னிடத்தில் பாவமில்லை என்ற அகந்தை உணர்வு அவனை பாவமாக்கும்! தன்னை பாவிகளில் பிரதான பாவி என்ற உணர்வு, பாவத்திலிருந்து அவனை தூய்மையாக்கும்! இதை அறிந்த... அவன் வினோதன் அல்லவா!

எவ்வளவு அதிகம் கொடுக்கிறானோ, அவ்வளவு அதிகம் பெற்றிருப்பதையும்! தனக்கென எவ்வளவு அதிகம் வைத்திருக் கிறானோ, அவ்வளவு அதிகம் தரித்திரவான்! என அறிந்து வாழும் இந்த கிறிஸ்தவன், வினோதன் அல்லவா!

இந்த வினோதனை உலகம் அறியவில்லை! அவனை கணக்கு போட்டு வரைந்திட பார்த்தால், அவனது தோற்றம் புரியவில்லை! ஏனெனில்.... அவன் ஒரு வினோதன்!

– A.W. டோசர்

---

## விசுவாச ஊழியத்தில், உங்கள் மகளுக்கு ஏன் காது செவிடு?

**சா**க்ரமண்டோ என்ற பட்டணத்தில் நடந்த விசுவாச - சுகமளிக்கும் கூட்டத்தில் விக்கிள்ஸ்வொர்த் பிரசங்கித்தார். அப்போது வழக்கம்போல் அவருடைய ஒரே மகள் ஆலிஸ் மேடையில் அவர் அருகில் அமர்ந்திருந்தாள். வேதத்தை வாசிக்க தன் கண்ணாடியை எடுத்த விக்கிள்ஸ்வொர்த், அது கீழே உள்ள செயினில் மாட்டிக் கொண்டது. அதை எடுக்க உதவும்படி 'ஆலிஸ்' என கூப்பிட்டார். ஆலிஸ், அவர் கூப்பிடுவதை கேட்க முடியவில்லை. இரண்டாம் முறையாக 'ஆலிஸ் கொஞ்சம் உதவி செய்' என கூப்பிட்டார். அப்பொழுதும் அவள் கேட்கவில்லை. இப்போது சற்று அதிகமாய் 'ஆலிஸ் ஆலிஸ்' என கூப்பிட்டார். திரளாய் கூடியிருந்த மக்கள் இதை

வேடிக்கையாய் பார்த்தார்கள். விசுவாச ஜெபத்திற்கு வந்த அனைவரையும் சுகப்படுத்தும் விக்கிள்ஸ்வொர்த்தின் ஒரே மகள் காது கேளாத செவிடாய் இருந்தாள்! அவரோ, கண் பார்வைக்கு கண்ணாடி போட்டிருந்தார்!

யாரோ ஒருவர், 'உங்கள் மகள் ஏன் செவிடாய் இருக்கிறாள்?' என கேட்டார். வழக்கம்போல், சிரித்து கொண்டே "அவளுக்கு விசுவாசம் குறைவு!" என கூறினார். இதை தவிர வேறு பதிலை அவர் ஜோடித்தது இல்லை.

விக்கிள்ஸ்வொர்த் தன் மகள் ஆலிஸை அதிகமாய் நேசித்தார். தேவ பக்தி நிறைந்த 'ஜேம்ஸ் சால்ட்டரை' அவளது கணவனாக தேவன் கொடுத்திருந்தார். தனது ஆப்பிரிக்கா தேசத்து ஊழியங்களில் ஆலிசும், ஜேம்ஸ் சால்ட்டரும் உறுதுணையாய் நின்றார்கள். ஆகிலும், "செவிடாய் இருந்த ஆலிஸ்" அவருடைய சுகமளிக்கும் கூட்டங்களுக்கு முரண்பாடாய் தோன்றியது. ஒருவேளை, அது பவுலின் மாம்சத்திலிருந்த முள்ளிற்கு சமமாய் இருக்குமோ? அல்லது கூடியிருந்த அனைவரும் சுகமாவதற்கு இந்த மனுஷன் காரணமல்ல, "**தேவன்தான்**" என விளங்கச் செய்வதற்கோ? அல்லது, கர்த்தரின் வல்லமையான கிரியையின் மத்தியில், தன்னை அவர் தாழ்த்துவதற்கோ? ..... என பல ஆவிக்குரிய கேள்விகள் இருக்கதான் செய்கிறது. விக்கிள்ஸ்வொர்த்தின் மருமகள், தன் மாமனாரை அதிக கனம் செய்து நேசித்தாள். ஒரு சமயம் அவள் கூறும்போது "ஆலிஸின் செவிட்டுத் தன்மை என் மாமனாருக்கு அதிக பொறுமையை கற்றுக்கொடுத்தது. அவரும் தன் ஒரே மகள் மீது ஆச்சரியமான அன்பு வைத்திருந்தார். வேதத்திலிருந்து சில பகுதிகளை தனக்காக வாசிக்கும்படி ஆலிஸிடம் கேட்டுக்கொள்வார்! தனக்கு வந்த கடிதங்களுக்கு பதில் எழுதும்படியும் கேட்டுக் கொள்வார். இவ்வாறு, தன் காது ஊனமான மகளை, தன் ஊழியத்தில் ஈடுபடுத்தி, அவளை மகிழச்செய்தார்! இதுபோன்ற சமயங்களில் அவர் மிகவும் பொறுமையாய் தன் மகளின் குறைகளை சகித்துக் கொண்டார்....

அவரது கோபம், பதட்டம், பொறுமையின்மை ஆகிய அனைத்தும் அவரை ஆட்கொண்ட துன்பமயமான அக்கினி பிரவாகத்தில் கழுவப்பட்டு போயின!" என கூறினாள்.

தன் மகள் முகத்திற்கு நேராக நின்று அவர் பேசுவதை, தந்தையின் உதட்டின் அசைவை வைத்து ஆலிஸ் விளங்கிக் கொள்வாள். ஆலிஸின் மகன் தன் தாத்தாவைப் பற்றி கூறும்போது "அம்மாவுக்காக தாத்தா காட்டிய அன்பு! அவர் உள்ளத்தில் எழுந்த வேதனை! அதை அவர் பொறுமையோடு தாங்கிக்கொண்டது! ஆகிய அனைத்தையும் நாங்கள்

கண்டோம். ஆகிலும், தன் வீட்டு சூழ்நிலை எதுவாயிருந்தாலும்....

என்னுடைய தாத்தா விக்கிள்ஸ்வொர்த், அவர் சேவகம் செய்த எஜமானனுக்கு முன்பாக நின்ற விசுவாசம் கடுகளவும் குறையாமல் ஓங்கிய சிகரம் போல் இருந்ததை எங்கள் கண்ணார கண்டோம்!" என கூறினான்.

பல சமயங்களில், தன் ஜெப அறையிலிருந்து ஆர்வத்தோடு வந்து ஆலிஸை அழைத்து சுகத்திற்காக கை வைத்து ஜெபிப்பார். ஆகிலும் ஜீவ காலமெல்லாம் ஆலிஸ் சுகம் பெறவில்லை!

அவர் குடும்பத்தில் அடைந்த துன்பங்களை சீண்டுவதுபோல் பேசியவர்களும் உண்டு. அவர் தன் கண்பார்வைக்கு கண்ணாடி அணிந்திருந்ததை குத்தி காட்டுவதைப்போல் "**விசுவாச சுகமளிக்கும் உங்களுக்கு ஏன் கண்ணாடி?" என கேட்டார்கள் பலர்.** தன் விசுவாசத்தில் மலைபோல் நின்ற விக்கிள்ஸ்வொர்த், இதுபோன்ற கேள்விகளுக்கு சற்றும் மனம் தளராமல் "எலிசாவிற்கு ஏன் வழுக்கை தலை இருந்தது? என நீங்கள் அவரிடம் போய் கேளுங்கள்" என புன்சிரிப்புடன் கருத்து ஆழத்தோடு கெம்பீரமாய் பதில் கூறுவார். அவ்வாறு பதில் கூறி இருந்தாலும் விக்கிள்ஸ்வொர்த் தனக்கென ஒரு விடையை வைத்திருந்தார்!

அது என்னவெனில், வெஸ்லி ஸ்டீல் என்ற அவரது மற்றொரு மருமகன் "மாமா நான் இந்த கேள்வியை கேட்பதற்காக என்னை மன்னியுங்கள். இவ்வளவு பெரிய விசுவாசம் கொண்ட நீங்கள் ஏன் கண்ணாடி அணிந்திருக்கிறீர்கள்?" என கேட்டார். விக்கிள்ஸ்வொர்த் தனக்குள் பெற்றிருந்த பதிலை தன் மருமகனுக்கு கூற முயன்றபோது அவரது கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.....

"என் மகனே உங்கள் மனதில் எழுந்த கேள்வியை அப்படியே கேட்டதற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். பல வருடங்களுக்கு முன்பாக ஒரு வல்லமையான தேவ மனிதன், தன் விசுவாசத்தில் அநேகரை சுகப்படுத்தினார். ஆகிலும் அவர் கண்ணாடி அணிந் திருந்தார். **அன்று அவரை எனது இருதயத்தில் தீதாய் முறுமுறுத்தேன்.** இன்று நீங்கள் வெளிப்படையாய் கேட்டதுபோல், அவரிடத்தில் அறிக்கைசெய்து என் இதய கறைகளை **சரிப்படுத்த தவறிவிட்டேன்.** அதனிமித்தமே என் ஜீவ காலமெல்லாம் கண்ணாடி அணிந் திருக்கிறேன்" என பதில் கூறியவுடன்... அவரது மருமகன் வெஸ்லிஸ்டீல் பெர்க் தன் மாமனாரின் உத்தம பக்தியை கண்டு கண் கலங்கிப் போனார். அதோடு, தாழ்மையின் நல்ல பாடத்தையும், தன் மாமனாரிடமிருந்து கற்றுக்கொண்டார்!

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

## 'இன்றுள்ள சூழ்நிலை' மாறுவதே, உண்மை விசுவாசம்!

**வே**தாகம புத்தகம் வேத வாக்கியங்களை 'விளக்கிக்கூறும்' புத்தகம் என்றே அநேகர் வாசிக்கிறார்கள். ஆனால் வேதாகமத்தில் வாசிக்கும் ஒவ்வொரு வசனமும் பிரதானமாய், 1) விசுவாசிக்கப்பட வேண்டும்! 2) விசுவாசித்த வசனத்திற்கு கீழ்படிய வேண்டும்! இதுவேயன்றி ஒரு ஆத்துமாவிற்கு மாபெரும் விளக்க அறிவு தேவையில்லை.

ஒருவன் தன்னுடைய அறிவில் தேவனுடைய வார்த்தையை விளங்கிக் கொள்வதற்கும் 'வார்த்தையில் அடங்கிய தேவனை' அறிந்துக் கொள்வதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது!

நீங்கள் திரும்பத் திரும்ப 'கான்பரன்ஸ்' கூட்டங்களுக்கு சென்றுவிட்டு **உங்கள் விசுவாசம் வளரவில்லை என்றால்** அந்த கான்பரன்ஸ் கூட்டத்தால் என்ன பயன்? இக்காலத்தில் 'விசுவாச மில்லாத விசுவாசிகளை' அறுவடை செய்வதுதான் தேவனுக்கு ஏற்பட்ட கதியா? இதுபோன்ற கிறிஸ்தவர்கள், தேவனுடைய நாமத்திற்கு இகழ்ச்சியை உண்டாக்குகிறார்கள்.

ஒரு உண்மையான விசுவாசம் கொண்ட கிறிஸ்தவனுக்கு 'ஆவிக்குரிய செல்வமே' வாழ்வின் மகா அருமையாய் இருந்திருக்க வேண்டும். கப்பலில் பயணம் செய்யும் ஒரு கப்பல் மாலுமி, தன் பையில் காசு இல்லாவிட்டாலும், கப்பலின் அடித்தளத்திற்கு கீழாய் உள்ள நடுக்கடலில் 'கோடி கோடி டாலர்கள்' கொட்டிக் கிடக்கிறது என்ற மகிழ்ச்சி எண்ணத்தோடு கப்பலை ஓட்டினால், அவனே பாக்கியம் நிறைந்த ஓர் மாலுமி.

இதுபோன்றுதானே வேதமும் கூறுகிறது! "எல்லாம் உங்களுடையதே! நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்! கிறிஸ்து தேவனுடையவர்" என கெம்பீரிக்கும் செல்வத்தை வேத புத்தகத்தின் விசுவாசத்தின் மூலமாய் பெறாமல், அவர்கள் வறுமையில் வாடியது போன்று இருப்பது ஓர் பெருந்துயரம்.

சபையின் கூட்டங்களிலோ அல்லது ஜெபக் கூட்டங்களிலோ "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை! அவரால் எல்லாம் கூடும்! என ஆர்ப்பரித்து விட்டால், அதற்கு பெயர் விசுவாசமா? இல்லவே இல்லை! நீங்கள் சபையாக எழுந்து 'தேவன் சர்வ வல்லவர்' என கூறியது எல்லாம் அவரை பற்றிய குணாதிசயம் மாத்திரமே ஆகும். ஆனால், என் தேவையை அறிந்து சர்வ வல்ல தேவன் 'இந்த தண்ணீரை' 'திராட்ச ரசமாய்' மாற்றுவார்! என விசுவாசிப்பது அன்றோ, தேவன்

நம் பட்சத்தில் எதிர்பார்க்கிறார். **இந்த சூழ்நிலையில், இந்த தண்ணீரை, திராட்ச ரசமாய் மாற்றுவார்!** என விசுவாசிப்பவர்களுக்கே விசுவாசத்தினால் எல்லாம் கூடும்! அல்லது அவர்கள் பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட்டு விட்டது. அப்படி இல்லையென்றால், உங்கள் பிரச்சனை அப்படியே தான் இருக்கும்! "என் தேவன் சர்வ வல்லவர்" என நீங்கள் கூறினாலும் அதில் பிரயோஜனம் ஒன்றும் இல்லை!

– லியோனார்டு ரேவன்ஹில்

---

## 'முகஸ்துதி பாடும்' ஊழியர், உத்தமரல்ல!

**ச**ர்க்காரில் உயர்ந்த பதவியிலிருந்தவரும் அவர் மனைவியாரும் ஒரு சபையில் அங்கங்களாயிருந்தார்கள். அந்தச் சபை போதகரின் கவனமெல்லாம் 'அவர்கள் பேரிலேயே' இருக்கும். அவர்களை அடிக்கடி சந்திப்பார்! அவர்கள் ஆராதனைக்கு வந்தால், ஆசனத்தில் வெகுநேரம் உட்கார்ந்திருப்பது அவர்களுக்குக் கஷ்டமாயிருக்கு மென்று போதகர் தமது பிரசங்கத்தை 'பதினைந்து நிமிஷத்தில்' முடித்துவிடுவாராம்! இதை அந்த, சர்க்கார் உத்தியோகஸ்தரே ஒரு கூட்டத்தில் சொல்லிப் போதகரைப் புகழ்ந்து பேசினதை நான் கேட்டேன்.

மேலும் சபையில் முக்கியஸ்தரான ஒரு கனவான் அல்லது அவரது மனைவி மரித்தால், குடும்ப ஆறுதலுக்காவும், ஞாபகார்த்தமாகவும் ஜெபக்கூட்டங்கள் வைப்பதுண்டு. இறந்தவர்களிடம் எத்தனை குற்றம் குறைவுகள் இருந்தபோதிலும், அவர்கள் கிறிஸ்தற்றவர்களாகவே மரித்திருந்த போதிலும், வீட்டாரைப் பிரியப்படுத்தும்படி, 'அந்த கனவானை' அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்து, அவர்கள் மரணம் "பரலோகில் கொண்டாடும் நிகழ்ச்சிபோல்" சித்தரித்து, முகஸ்துதி பாடுவார்கள்! இறந்துபோனவர்கள் இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் என்பது எல்லாரும் அறிந்த விஷயமானால் மாத்திரமே, அவர்களில் காணப்பட்ட நற்குணங்களை எடுத்துப்பேசலாம்....

ஆனால் இப்படிப்பட்ட ஜெபக்கூட்டங்களில் இறந்துபோன ஆட்களைப்பற்றி 'முகஸ்துதியால், பொய்யாய் வர்ணிப்பதை நிறுத்தி'....

கிறிஸ்து பரத்தில் வாசஸ்தலத்தை தம்முடையவர்களுக்கு ஆயத்தம் பண்ணுவதையும், உத்தம விசுவாசிகள் அழிந்துபோகாமல் அவரிடம் பத்திரமாக இருக்கிறார்கள் என்பதையும், அந்த நித்திய மகிமையில் பிரவேசிப்பதற்கு இந்த பூமியில் நாம் தகுதியுள்ளவர்களாக வேண்டும் என்பதையும் பற்றி பேசி, ஜெபித்தால், எல்லோருக்கும் அது ஆசீர்வாத செய்தியாயிருக்கும்! குடும்பத்தினருக்கும்

ஆறுதலாயிருக்கும்! ஆண்டவருக்கும் பிரியமாயிருக்கும்! **நாஸ்துதியும், வீண்புகழ்ச்சியும் தேவ ஊழியருக்குத் தகாது!** ஆலய ஆராதனை முடிந்தவுடனே, முந்தித் தனவந்தவர்களிடம் ஓடி, கைகுலுக்கிப் பேசுவதும் சில ஊழியருக்கு வழக்கம். தேவ மக்கள் எவ்வளவு ஏழைகளாயிருந்தாலும் அவர்களையே நாம் பிரதானமாய் தேடி, பட்சமாய்ப் பேசி அனுப்ப வேண்டும். இவ்விதமான 'பட்சபாதத்தை' யாக்கோபு பலமாய்க் கண்டிக்கிறார். ஆண்டவரும் தேவாலயத்தில் தாம் கண்ட ஐசுவரியவான்களையல்ல, அந்த ஏழை விதவையைப் புகழ்ந்து பேசினார். ஆகிலும், ஒருவரின் ஆத்துமாவில் காணும் தரித்திரத்தை காணாமல் 'ஐசுவரியவான்' என ஒதுங்குவதும் சரியல்ல! ஊழியனின் வேலை, கர்த்தருடையது! நமது கண்கள் கர்த்தரையே நோக்கியிருந்தால், அவர் தமது வேலையைக் கைவிடமாட்டார்!

– பரமானந்தம் ஐயர்

---

## 'பாலைவனத்திலும் பசுமை' ஜெப வாழ்வில் உண்டு!

**ஜெ**ப வேளையில், நாம் அனுபவிக்கும் ஆச்சரியமான சமாதானமும், அமைதியும் நம் சொந்த சிந்தையிலிருந்து தோன்றுவதல்ல. மாறாக, நம்முடைய ஆத்துமாவில் தங்கும் "தேவனுடைய சமூகத்திலிருந்து" விளைவதேயாகும்.

ஒரு சிறு குளத்திலிருந்து எழும்பும் நீராவி, மிகப்பெரிய மேகங்களை உருவாக்கிட முடியாது! அதுபோன்ற திரண்ட காரிருள் மேகங்கள் விசாலமான சமுத்திரத்திலிருந்தே உயர்கிறது..... நிலத்தின் தாகத்தையும் மழை பொழிந்து தீர்க்கிறது!

ஆகவே நம் சொந்த முயற்சியினால் கொண்ட தியானத்தில் 'தெய்வ சமாதானம்' காணப்படுவதில்லை..... மாறாக, மெய்யான ஜெப வேளையில், அளக்க முடியாத தெய்வ அன்பின் சமுத்திரத்திலிருந்தே 'சமாதானத்தைக் கண்டடைய' முடியும்!

'தேவன் அன்பாகவே இருக்கிறார்!' ஆகவே, இவ்வுலகில் நமக்கு தேவையான ஒவ்வொன்றையும், நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தேவையான ஒவ்வொன்றையும், அவர் தாராளமாய் தருகிறார்! ஆனால், இவ்வாறு தேவனுடைய ஆவியிலிருந்து ஆசீர்வாதங்கள் தாராளமாய் அருளப்படுவதால், நம்மில் பெரும்பாலோர் அதை வெகு சாதாரணமாய் எடுத்துக் கொள்கிறார்கள். ஜனங்கள் தங்கள் இருதயத்திற்குள் பெற்றுக்கொள்ள வாஞ்சித்து, அந்த இருதயத்தை தேவனிடத்தில் திறந்து வைத்திருந்தால்..... அவர்களிடம் தேவன் எல்லா சமயங்களிலும் உணர்வூட்டி பேசுவார்! இதுபோன்று, இருதயத்தில் பெறவேண்டிய விழிப்பை அநேகர் இழந்து விட்டார்கள்.

ஜெபத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நம் உலக ஜீவியத்திற்கு தேவையான காற்று, தண்ணீர், உஷ்ணம், வெளிச்சம் போன்றவைகளுக்கு சமானமாகும். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஜனங்கள் கூட 'மண்ணுக்குரிய ஆசீர்வாதங்களில் மதியீனமாய் மனம் வைத்து' தங்களுக்கு அருளப்படும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை வீணாக சிதறடிக்கிறார்கள்.

**ஆனால் தங்கள் ஜெப வாழ்க்கையின் மூலமாய், தங்கள் இருதயத்தை தேவனுக்கு முன்பாக திறந்து வைத்தவர்கள்.... மெய்யான ஞானத்தையும், வழி நடத்துதலையும் அவருடைய சமூகத்தில் பெறுகிறார்கள்!**

மிகப்பெரிய டால்பின் மீன்கள் சமுத்திரத்தின் ஆழங்களில் சுகமாய் வசிப்பதற்கு காரணம், குறிக்கப்பட்ட சரியான நேரத்தில் சமுத்திரத்தின் மேல் பரப்பில் துள்ளி துள்ளி குதித்து, தங்களுக்கு தேவையான பிராண வாயுவை பெற்றுக்கொள்ளும் இரகசிய மேயாகும். நாமும் இதைப்போலவே, நம் ஜெப ஜீவியத்தை ஆவிக்குரிய நிலைக்கு உயர்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறாக **நம் ஜெபத்தில் சுவாசிப்பதே** தேவனுடைய ஜீவனிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆவியாகும்! அவருடைய ஆவியிலிருந்தே நாம் ஜீவனையும் சமாதானத்தையும், இந்த கேடான உலகத்திலேயே பெற்று அனுபவிக்கிறோம்.

ஒரு புதிதாய் பிறந்த குழந்தைக்கு 'உறிஞ்சி குடிப்பதை' யாரும் போதிக்க அவசியமில்லை. அது தானாகவே தன் தாயின் மடியைச் சார்ந்து தன் வளர்ச்சிக்குரிய தேவையான பாலை பெற்றுக்கொள்கிறது.

**ஒரு அன்புள்ள தாய், தன் பிள்ளைக்கு தேவையான ஒரு நன்மையை கூட பதுக்கி வைப்பதில்லை. இருப்பினும், அந்த குழந்தை தன் தாயின் மடியில் பால் உண்ண முயற்சிக்காத பட்சத்தில், தன் உணவை பெற்றுக் கொள்ள முடியாது என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்.**

இதைப்போலவே, நம் ஜெப வேளையில், தேவனுடைய மடிக்கு நேராய் உயர்த்தி செல்லப்படுகிறோம். ஆனால், நம் ஆத்துமத்திற்கு தேவையான ஆவிக்குரிய உணவை நாம்தான் கரம் நீட்டி அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்!

ஒரு மரத்தினுடைய வேரின் 'நுனியானது' மிகவும் உணர் வுள்ளதாய் மிகுந்த பொறுப்போடு, நீரில்லாத நிலத்திலிருந்து விரைந்தோடி, தங்களுக்கு வேண்டிய ஈரத்தையும், ஜீவனையும் அடையும் இடத்தில் 'தானாகவே' பற்றிப் படர்கிறது. நான் பாலைவன நிலத்திற்கு சென்றபோது பச்சைபசேல் என்று மிகுந்த கனிகளோடு

நிற்கும் மரத்தை கண்டு ஆச்சரியமடைந்தேன். ஓங்கிய இந்த மரத்தின் இரகசியம், அந்த வேர்கள்தான்! அவைகள் ஜீவன் பெற துரிதமாய் தேடி ஓடி, ஈர நிலத்தை பிடித்து கொள்கின்றன! ஆனால், அந்த மரத்தை சுற்றியோ, சுடு மணல் கொண்ட பாலைவனமே எங்கும் நிறைந்திருக்கிறது!

இன்றும், ஜெப வாழ்வில் வேர் விட்டவர்கள், துன்பமும் தங்களுக்கு தீமையும் செய்திடும் மக்கள் நடுவில் வாழ்ந்தாலும், அவர்களின் முகமோ பிரகாசிக்கும் மகிழ்ச்சியினாலும், கனிதரும் வாழ்க்கையாலும், நிறைந்திருப்பதை நாம் காண முடிகிறது!

**இரகசியம் என்ன? தங்கள் ஜெபத்தின் மூலம், அவர்களின் மறைவான வேர்கள், விசுவாசத்தில் ஆழமாய் சென்று ஜீவதண்ணீரைப் பிடித்துக் கொள்கிறார்கள்!**

இதுபோன்ற ஜெபத்திற்கு துரிதம் கொண்ட வாழ்க்கையை நீங்கள் கண்டடைந்தால், நீங்களும் மாயையிலிருந்தும், தீமையிலிருந்தும் துயரமான சம்பவங்களிலிருந்தும் பாதிக்கப்படாமல் 'விட்டு விலகி' தேவனையும் அவர் வழங்கும் ஜீவனையும், நிம்மதியையும், மகிழ்ச்சியையும் கண்டுபிடிப்பீர்கள் என்பது உறுதி!

– சாது சுந்தர்சிங்

---

## மானிட அன்புகாட்டி 'சிலுவையை பறிப்பது' நியாயமல்ல!

எங்கள் டோனாவூர் ஆசிரமத்தில், அவ்வப்போது நடக்கும் சில சம்பவங்கள், அவர்களின் உத்தமத்தை புடமிட வந்த சோதனை களாகவே நான் கண்டேன்! "இந்த சகோதரிகள் என்னைப் பகைக்கிறார்கள்" என கண்ணீருடன் கூறிய ஒரு சகோதரியிடம், எனக்கு உடனே பாசம் உண்டாகி, அந்த பாசத்தில் "யார் அந்த சகோதரி சொல்!" என படபடத்த நேரத்தில்..... என் ஆண்டவர் என்னிடம் குறுக்கிட்டார். இவ்வாறு படபடத்த நான், உடனே காட்சியிலிருந்து மறைந்து, அவரது கல்வாரி பாதம் அமர்ந்து, அவர் கற்றுத் தந்த போதகம் பெற்றேன். "**இந்த கண்ணீர்விடும் சகோதரிக்கு பாசம் காட்டி, அவளிடமிருந்து சிலுவையை அபகரிப்பது சரிதானா?**" என ஆண்டவர் கூறிய போதனை, என் உள்ளத்தை அதிர வைத்தது. அன்போடு என்னை நல்வழிப்படுத்திய ஆண்டவருக்கு நான் நன்றி கூறினேன்.

இப்போது நான் எழுந்து சென்று, கண்ணீர் வடித்த அந்த சகோதரியிடம் "சகோதரி, இவ்வாறு நீ கண்ணீர் வடிப்பது, உன் சொந்த பட்சதாபத்தை பத்திரமாய் வைத்துகொள்ள மாத்திரமே உதவும்! துயரத்தின் பாதையில் அல்லவோ நம் குருநாதர் இயேசு

*சென்று, பாதை காட்டினார்!*

**உன் மனம்புண்படும் செயலை, அந்த சகோதரிகள் மூலம் ஆண்டவர் உனக்கு வெளிச்சம் தந்துள்ளார்! வஞ்சகமான அந்த பாசத்தின் 'சுயத்தை' அதாவது, அந்த சுய ஜீவனை சாவுக்கு ஒப்புக்கொடுத்து, இயேசுவின் நல்ல போர்ச் சேவகனாய் தீங்கனுபவி! உன் சிலுவை உன்னைவிட்டு போய்விடாதபடி, சிலுவையை இறுக பிடித்துக்கொள்!**

*உன் உள்ளத்தில் எழும் பகையை ஒழித்து, உன்னை பகைத்தவர்களை அன்புகூரு..... அவர்களுக்கே சிறந்த மாதிரியாய் வாழ்ந்து காட்டு!" என நான் கூறியதும், அந்த சகோதரி தன் கண்ணீரைத் துடைத்து, புன்முறுவல் பூத்து, கெம்பீரமாய் தன் பணிக்குத் திரும்பினாள்!*

*நானோ, என் கண்ணீரை கர்த்தருக்கு காணிக்கையாக்கி "என் ஆண்டவரே,* **மானிட அனுதாபத்தைக் காட்டி,** *அந்த சகோதரியை சிலுவையிலிருந்து பின்வாங்கச் செய்யாதபடி நடத்திய உம் கிருபைக்கு ஸ்தோத்திரம்! சிலுவையின் தைரியத்தை காட்ட முடியாத 'கோழையாய்' இருந்தமைக்கு என்னை மன்னியும்! ஓ, கர்த்தாவே, உம் கல்வாரி சிநேகமே, மாசற்ற சிநேகம்!" என என்னை அவருக்கு காணிக்கையாய் ஈந்தேன்!!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## "தேவ இளைப்பாறுதல்" புதிய உடன்படிக்கையின் ஈவு!

*"**தே**வனுடைய இளைப்பாறுதலுக்குள்"* **-Rest in God** *(எபி.4:9-10) பிரவேசித்திட வேண்டுமென்றால், நம் சொந்த முயற்சிகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்திடும் இடத்தையே கண்டடைந்திட வேண்டும். ஒரு சிலர் 14-வருடங்களுக்கு முன்பாகவே தங்கள் சொந்த முயற்சியின் முடிவுக்கு வந்து விடுகிறார்கள்! மற்றவர்களோ, தங்கள் ஜீவகாலமெல்லாம் வனாந்திரத்தில் சுற்றித் திரிந்து விட்டு, இளைப்பாறுதலுக்குள் பிரவேசியாமலே போய் விடுகிறார்கள்!!*

*நம் யாவருக்கும் ஏற்பட்டிருக்கும் அவசரமான புதிய உடன்படிக்கை செய்தி இதுதான்: "அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்கு பயந்திருக்கக்கடவோம்" (எபிரெயர்.4:1).*

*அன்பரின் இதயம் அருகில் இளைப்பாறும் ஸ்தலம் உண்டு*
*அன்பரே உம் இதயம் அருகில்... காத்திருக்கும் எங்களை*
*அன்போடு தாங்கியருளும்! ஆமென்.*

*– சகரியா பூணன்*

## 'ஒன்றான ஐக்கியம்' ஆவியின் வல்லமையால் கூடும்!

இயேசு இந்த பூமியிலிருந்து பரத்திற்கு போவதற்கு முன்பாக, நம் யாவரையும் குறித்த மிகப் பெரிய ஒரு பாரம் கொண்டவராயிருந்தார். அவருடைய சீஷர்களும், அவர்களைத் தொடர்ந்து விசுவாசிப்பவர்களும், பிதாவோடும் குமாரனாகிய தன்னோடும் இணைந்திருக்க விரும்பினார். அதே அடிப்படையில், ஒருவரோடொருவர் ஐக்கியப்படவும் விரும்பினார்.

இந்த அன்பின் ஐக்கியமே, இயேசுவின் உள்ளத்திலிருந்த மிகப்பெரிய விருப்பமாயிருந்தது. ஆம், ஐக்கியமே இயேசு குறிப்பிட்ட 'பெரிதான கிரியை!' (யோவான்.14:12).

'இந்த ஐக்கியத்தை' இயேசுவால், இந்த பூமியிலிருந்தபோது கொண்டு வரமுடியவில்லை. கடைசி இராப்போஜனத்தில், இயேசு தன் சீஷர்களின் கால்களை கழுவிய பின்பு 'தான் அவர்களுக்காக மரிக்கப் போவதை' வெளிப்படையாய் பேசினார். அந்த நேரத்தில் கூட "**தங்களில் யார் பெரியவன்?**" என்ற வாக்குவாதம் சீஷர்களிடத்தில் ஏற்பட்டது. மேலும் போர்ச்சேவகர்கள் இயேசுவை பிடிக்க வந்தபோது, அவருடைய எல்லா சீஷர்களும் அவரை 'தனியே' விட்டு, ஓடிவிட்டார்கள். பூரணம் நிறைந்த பிரசங்கியான இயேசு மூலமாய், தேவனைப் பற்றிய முழுமையான சத்தியங்களை சுமார் 3 - ஆண்டுகள் கேட்ட அந்த சீஷர்கள், .... மேலும், இயேசுவைப் பின்பற்றுவதற்கு தங்களுடையதை எல்லாம் விட்டுவிட்டு வந்த அந்த சீஷர்கள்.... தங்கள் எஜமானோடும், ஒருவரோடு ஒருவரும், ஐக்கியப்பட முடியாமல் போனார்கள்.

இது ஒன்றும் ஆச்சரியமில்லை! ஏனெனில் நம் யாவருக்குள்ளும் **சுயநலம்** வேரூன்றி இருக்கிறபடியால் எந்த மனுஷனும் தேவனோடு திவ்ய ஐக்கியம் கொள்ளவும் அல்லது மற்றவர்களோடு ஐக்கியம் கொள்ளவும் அவர்களால் ஒருபோதும் கூடாது!

பரிசுத்தாவியின் வல்லமை மாத்திரமே நம்மை பிதாவோடும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும், ஒருவரோடொருவரும் கொண்ட 'ஒன்றான ஐக்கியத்தை' கொண்டு வரமுடியும்!

அன்று சீஷர்கள் சிதறியதற்கு காரணம், பரிசுத்தாவியின் வல்லமையை அப்போது பெறவில்லை. இன்றோ, விசுவாசிகளாகிய நாம் யாவரும் பரிசுத்தாவியின் அபிஷேகத்தை, பெற்றிருக்க வேண்டுமல்லவா? அவ்வாறு நீங்கள் பெற்றிருந்தால் மாத்திரமே, அந்த வல்லமைக்கொண்டு, இயேசு வாஞ்சித்த ஐக்கியத்தின் நிறைவை இந்த பூமியில் நிரூபித்து வாழ்ந்திட முடியும்!

– சந்தீப் பூணன்



## சீமாட்டி 'பெர்பெட்சுவா'
## கிறிஸ்துவின் சாட்சிக்கு அகோர பலியானார்!

**(AD 203)**

ஒரு ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்த இளம் வயது சீமாட்டியே இந்த பெர்பெட்சுவா! அவள் 23 - வயது நிரம்பிய மனைவியாகவும்! ஒரு பாலகனுக்கு தாயாகவும்! ஒரு உத்தம கிறிஸ்தவளாகவும்! இருந்தாள். ஒரு மறுதலிக்காத கிறிஸ்தவளாய் இருந்ததினிமித்தம், வட ஆப்பிரிக்காவில் இருக்கும் இன்றைய டுனிஷியா (Tunisia) பட்டணத்தில், செப்டிமஸ் சிவியரஸ் என்ற பேரரசனால், பெர்பெட்சுவாவோடு சேர்த்து 5பேர் கிறிஸ்தவ விசுவாசத்திற்காக தண்டிக்கப்பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்ட 5பேரில், 8மாத கர்ப்பிணியாய் இருந்த பெலிசிட்டஸ், சிறையிலேயே ஒரு மகளைப் பெற்றெடுத்தாள். பெர்பெட்சுவாவின் தகப்பன் ஒரு அஞ்ஞானி. சிறைச்சாலைக்கு பலமுறை பெர்பெட்சுவாவின் கைக்குழந்தை மகனை தோளில் தூக்கிக்கொண்டு வந்து, கிறிஸ்தவத்தை துறந்து அவள் உயிரை காப்பாற்றிக்கொள்ள கண்ணீருடன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

"மகளே, நரைத்து விட்ட என் தலையைப் பார். இந்த வயோதிப தகப்பனுக்கு இரங்க மாட்டாயா? உன் சகோதரனை, உன் தாயை, உன் அத்தையை சற்று ஏறிட்டுப்பார். நீ இல்லாமல் வாழ முடியாத இந்த கைக்குழந்தை மகனைப்பார்" எனக்கூறி என் கைகளை முத்தம் செய்து, சிறையில் என் பாதத்தில் விழுந்து அழுதார். என் தகப்பனின் நிலையைக் கண்டு நானும் அவரோடு கண்ணீர் விட்டேன். பின்பு என் கண்ணீரை துடைத்துகொண்டு "அப்பா, அழாதீர்கள், தேவன் எனக்கென்று நியமனம் செய்தது மாத்திரமே நடக்கும். என்னை ஆட்கொண்டிருப்பது, என் சொந்த பாதுகாப்பல்ல. தேவனே என் பாதுகாப்பு" என கூறியதும் உள்ளம் உடைந்து அழுது வீடு திரும்பினார். இந்த நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த, கிறிஸ்தவ நாலு பெண்மணிகளையும் பார்த்து "என் வீட்டின் சோகத்தைப் பார்த்து சோர்ந்து விடாதீர்கள்! விசுவாசத்தில் நிலைத்திருந்து, ஒருவரோடொருவர் நேச அன்புடன் கைகோர்த்து, வரப்போகும் விரோதத்திற்கு முன்பாய் தலை நிமிரக்கடவோம்."

மார்ச் 7ம் தேதி பெர்பெட்சுவாவும் அவளது நான்கு நண்பர்களும் பந்தய திடலுக்கு இழுத்து வரப்பட்டார்கள். முதலாவது அவர்களுக்கு கசையடி கொடுங்கள் என ஜனங்கள் சத்தமிட, அவ்வாறாகவே 5 பேருக்கும் கசையடி கொடுக்கப்பட்டது. பின்பு ஒரு காட்டுப்பன்றி அவர்களை தாக்கி காயப்படுத்தியது! பின்பு திடலில் அமர்ந்த மக்கள் கரகோஷம் செய்ய, ஒரு கரடி அவர்களை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை தன் நகத்தால் கீறி இம்சித்தது. அதன் பின்பு ஒரு சிறுத்தை அவர்கள் மீது பாய்ந்து கடித்து குதறியது. இறுதியாக ஒரு கொடிய காட்டெருமை அவர்களை கண்மூடித்தனமாய் தாக்கி தூக்கி எறிந்தது. காயத்தின் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்திருந்த பெர்பெட்சுவாவை ஒரு முரட்டு வீரன் திடலுக்குள் நுழைந்து கொடிய வாள் கொண்டு அவர்களை உருவ குத்தி கொன்றான். என் தந்தை 'என் விசுவாசத்தை கவிழ்ப்பதற்கு முயற்சித்த பாசத்தின் இழுப்பு தோல்வியுற்று' உத்தம விசுவாசத்தோடு, நாங்கள் ஐந்து பேரும் தேவனுடைய கரத்தில் எங்கள் ஆவியை பத்திரமாய் ஒப்படைத்தோம்!

- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்

## சர்ப்பத்தின் கவர்ச்சியா? இயேசுவின் ஜீவனா?

சில மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் மாலை நேரம் எங்கள் வீட்டின் தோட்டத்தில் ஒரு நீண்ட பெரிய பாம்பு தனது உடலை நீண்ட தூரத்திற்குப் போட்டுக்கொண்டு தனது வாயை ஒரு பொந்துக்குள் செலுத்திய வண்ணம் படுத்திருந்தது. அதைப் பார்த்ததும் நிச்சயமாக அந்தப் பாம்பு பொந்திற்குள் இருக்கும் ஒரு தவளையைப் பிடித்துக் கொண்டிருக்கின்றது என எண்ணினேன்.

ஆனால், அந்த பாம்பு தனது தலையை நுழைத்து வைத்திருந்த தட்டையான கல்லுக்கு மேலாக சில அடைக்கலான் குருவிகள் ஆனந்தமாக விளையாடிக்கொண்டிருப்பதை கண்டு திகைப்படைந்தேன். கீழே படுத்திருக்கும் பாம்பு தனது தலையை வெளியே இழுத்து, உயர்த்தினால் அதின் வாய்க்கு இரையாவது அடைக்கலான் குருவிகள்தான்! ஆனால், அந்தக் குருவிகள் தங்கள் கொடிய ஆபத்தை உணரவில்லையே? நான் அருகில் சென்று அவைகளைத் துரத்திவிட்டிருக்காவிட்டால், அந்த குருவிகளின் உயிர் போயிருக்கும்!

இதைப்போன்று ஒரு அடைக்கலான் குருவி ஒன்று, ஒரு பெரிய பாம்புக்கு நேராகத் தத்தி தத்திச் சென்று கொண்டிருப்பதையும், அது அந்த அடைக்கலானை விழுங்க ஆயத்தமாக இருப்பதையும், மற்றொரு சமயத்தில் எங்கள் தோட்டத்தில் கவனித்தேன். ஒருமுறை எங்கள் தோட்டத்தில் ஒரு பெரிய பாம்பு ஒரு நாள் மாலை நேரம் தவளை ஒன்றைப் பிடித்துக்கொண்டு நகர்ந்த நேரத்தில், மாலைச் சூரியனின் செவ்வொளி அந்தப் பாம்பில் பட்டதும் அதின் செதிள்கள் பிரகாசிக்கத் தொடங்கின. அதைக் கண்ட தேன் சிட்டுப் பறவை ஒன்று, அதை ஒரு அழகிய மலர் என்று எண்ணி அதின் செதிள்களில் தேன் குடிக்க அதினருகில் பறந்து சென்று, தேன் உறிஞ்ச முயற்சிப்பதை நான் மட்டற்ற ஆச்சரியத்துடன் கவனித்தேன்.

ஆம் பாம்பின் கவர்ச்சி பறவைகளை அதினண்டை எத்தனை சுலபமாக இழுத்துக்கொண்டு வந்து விடுகின்றது! அதைப்போன்றே, சாத்தானாம் பிசாசும் இந்தக் கடைசி நாட்களில் இன்றைய வாலிப உள்ளங்களை ‘கவர்ச்சியைக் காண்பித்து’ மிகவும் சுலபமாக அவர்களை விழுங்கிக் கொண்டிருக்கின்றான்! வாலிபர்களே கவனம்! உங்கள் ‘ஜீவன்’ தப்ப இயேசுவிடம் வாருங்கள்! ‘நானே ஜீவன்’ என அழைக்கும் இரட்சகர் மீது விசுவாசம் வைத்திடுங்கள்!!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.